# கரூர் நகராட்சி
## கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

**2021ம் ஆண்டு ஜனவரி 08 ம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 3.50மணிக்கு கரூர் நகராட்சியின் மன்ற அவசரக் கூட்டம் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் திருமதி.கே.எம்.சுதா, பி.எஸ்.சி., எம்.ஏ., பி.எட்., அவர்கள் தலைமையில் மன்றக் கூட்டத்தில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு**

கரூர் நகரத்தில் இயங்கி வரும் பேருந்து நிலையம் தற்போதைய போக்குவரத்திற்கு போதுமானதாக இல்லாத சூழ்நிலையில் புதியதாக பேருந்து நிலையம் அமைக்க கருப்பம்பாளையம் ஊராட்சி திருமாநிலையூர் வருவாய் கிராமம் ராயனூர் பகுதியில் அமைந்துள்ள, புல எண்கள். 95/2, 97/2, 98/1, 113/1, 114/A2, 115/1பி, 116/2, 117/1, 118, 119, 120, 121, 122, 123/1, 146/A, 147/A1, 148/1, 149, 150/1, 151/1, 152/1பி, 243/2, 246/2, 247/2, மற்றும் 248/2 ஆகியவற்றில் உத்தேச அணுகு சாலை உள்பட மொத்தம் 12.14.ஏக்கர் பரப்பளவிலான இடத்தில் அமைப்பது தொடர்பாக திரு.பி.சரவணன் என்பவரால் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் பொதுநல வழக்கு தொடர்ந்ததில் வழக்கு எண்.W.P.(MD)No.3449/2017 நாள்.28/02/2017ல் புதிய பேருந்து நிலையத்தினை இரண்டு மாத காலத்திற்குள் ஏற்படுத்தப்பட வேண்டுமென தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்மீது பேருந்து நிலையம் அமைக்க சுமார் 2 வருடங்கள் ஆகும் என்பதாலும், பேருந்து நிலைய கட்டுமான பணி வணிக திட்டம் என்பதால் அரசிடமிருந்து நிதி ஏதும் வழங்கப்படாது என்பதால் நகராட்சியில் சொந்த நிதியிலிருந்து மட்டுமே செயல்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. கரூர் நகராட்சியில் கூட்டு குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணி ரூ.68.40 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் பேருந்து நிலையம் அமைக்க நிதி ஏற்பாடு செய்ய வேண்டியது மிக சிரமமான ஒன்றாகும் என்கிற விவரங்களை குறிப்பிட்டு 28.02.2017–ம் தேதிய உயர்நீதிமன்ற தீர்ப்பின்மீது சீராய்வு மனு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில். (Review application No.26/2017) வழக்கு எண்.WP(MD)No.3449/2017ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் திரு.பி.சரவணன் என்பவரால் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண் Cont.,P(MD)No.345/2018ல் தொடரப்பட்டது.

அதனை தொடர்ந்து இவ்வழக்கில் 03.01.2019–ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால உத்தரவில் அரசு முதன்மை செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அவர்கள் மற்றும் நகராட்சி ஆணையர், கரூர் ஆகியோர் பேருந்து நிலையம் அமைப்பது தொடர்பான கால அட்டவணை குறிப்பிட்டு அறிக்கையை 08.01.2019 அன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும். தவறும்பட்சத்தில் இவ்வழக்கின் எதிர்மனுதாரர்கள் அனைவரும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் 09.01.2019 அன்று நேரில் ஆஜராக வேண்டும் என உத்தரவிடப்பட்டது. அதன்பேரில் அரசு முதன்மை செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் மதுரை உயர்நீதிமன்றத்தில் 09.01.2019 அன்று நேரில் ஆஜராகப்பட்டது.

அதனை தொடர்ந்து அரசு முதன்மை செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அவர்களால் 24 மாத கால அவகாசத்தில் பேருந்து நிலையம் கட்டப்படும் என குறிப்பிட்டு 11.01.2019–ல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து நீதிமன்ற அவமதிப்பு வழக்கு முடித்து வைக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து புதிய பேருந்துநிலையம் அமைக்க நிர்வாக அனுமதிக்கோரி திட்டக்கருத்துருக்கள் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் மூலமாக அரசுக்கு சமர்பிக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக அரசாணை எண்.65, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள்.27.05.2019ல் Public Private Partnership Mode (PPP) அல்லது Design, built, finance, Operate and Transfer basis (DBFOT) முறையில் புதிய பேருந்து நிலையம் அமைக்கவும், அரசு நிர்வாக அனுமதிக்கு பின்னர், தமிழ்நாடு அடிப்படை கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் வழிகாட்டுதலின்படி தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு பேருந்து நிலைய கட்டுமான பணி மேற்கொள்ளப்பட வேண்டும் என்கிற நிபந்தனையுடன் ரூ.47.00கோடி (ரூபாய் நாற்பத்து ஏழு கோடி மட்டும்) மதிப்பீட்டில் பேருந்து நிலையம் அமைக்க நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கான ஒப்பந்தப்புள்ளி படிவம் மற்றும் நிபந்தனைகளுக்கான தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் உத்தேச பேருந்துநிலையத்தின் இடம் தொடர்பாக திரு.குமார் என்பவர் கரூர் சார்பு நீதிமன்றம் வழக்கு எண்.O.S.No.222/2018 மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை வழக்கு எண் WP(MD)No.14556/2019-ல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேலும் நகராட்சிக்கு புதிய பேருந்து நிலையத்திற்காக இடம் வழங்கிய அட்லஸ் நிறுவனத்திற்கான உரிமையாளர் திரு.நாச்சிமுத்து என்பவர் பேருந்து நிலைய பணிகள் 5 வருட காலத்திற்குள் நடைபெறாத நிலையில் ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனையின்படி இடத்தினை திரும்ப வழங்க கோரி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் WP(MD)No.22551/2019-ல் அரசு முதன்மைச்செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அவர்கள், நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்கள் மற்றும் ஆணையாளர் கரூர் நகராட்சி ஆகியோர்களை எதிர்மனுதாரர்களாக சேர்த்து வழக்கு தொடர்ந்துள்ளார்கள்.

அரசாணை எண்.65, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள்.27.05.2019ன்படி Public Private Partnership Mode (PPP) அல்லது Design, built, finance, Operate and Transfer basis (DBFOT) முறையில் புதிய பேருந்து நிலையம் அமைக்கவுள்ள நிலையில் இடஉரிமை குறித்து வாரிசுகளிடையே வழக்கு தொடரப்பட்டுள்ளதாலும், ஐந்து ஆண்டுகளுக்குள் புதிய பேருந்துநிலையம் அமைக்காதபட்சத்தில் நிபந்தனையின்படி திரும்ப நிலத்தினை ஒப்படைக்கக்கோரி வழக்கு தொடரப்பட்டுள்ளதாலும், வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையில் ஒப்பந்தபுள்ளிகள் கோருவதற்கான பணிகள் நிலுவையில உள்ளது. இந்நிலையில் திரு. பி.சரவணன் என்பவர் கூடுதல் அரசு தலைமை செயலாளர் நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கும் துறை சென்னை (1), நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை (2) மற்றும் நகராட்சி ஆணையர் கரூர் ஆகியோர்களை பிரதிவாதிகளாக சேர்த்து மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் வழக்கு எண் Cont.P.(MD) No.1352 of 2020 in Cont. P.(MD) No.345 of 2018 in W.P.(MD) No.3449 of 2017–ல் அவமதிப்பு வழக்கு தொடர்ந்துள்ளார். எனவே மேற்படி வழக்கின் முக்கியத்துவத்தை கருதி அரசு சார்பாக Thiru.A.L.SOMAYAJI Special Senior Counsel, For Government of Tamil Nadu அவர்களை நீதிமன்றத்தில் ஆஜராகி வழக்கினை நடத்திடவும் அதற்கான செலவினங்களுக்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். (இ1/2225/2015)

தீர்மான எண்.4 அனுமதிக்கப்பட்டது.

2)கரூர் நகராட்சி வார்டு எண்.15 பாலாம்மாள்புரம் குடியிருப்பு பகுதிகளுக்கு ஜெயபிரகாஷ் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியிலிருந்து கழிவுநீர் கலந்து வருவதால் அப்பகுதிக்கு குடிநீர் விநியோகம் செய்யவும் 17 இடங்களில் குழாய்களை ஆய்வு செய்து மீண்டும் குழாய் இணைப்பு பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.3.00லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.00லட்சத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். (இ2/324/2021)

தீர்மான எண்.5 அனுமதிக்கப்பட்டது.

3)கரூர் நகராட்சி வார்டு எண்.20, 21, 22 ஜவஹர் பஜார் பகுதிக்கு நீர்தேக்கத் தொட்டி வளாகத்தில் பசுபதிபுரம் பகுதிகளுக்கான நுண்ணுயிர் செயலாக்கம் மையம் அமைக்கப்பட்டுள்ளது. அதன் அருகில் குடிநீர் விநியோகம் செய்ய பயன்படும் 400மி.மீ., விட்டமுள்ள வால்வுத் தொட்டி இருப்பதால் சுகாதாரமற்ற நிலை உள்ளது. எனவே, குடிநீர் பணியின் அவசியம் கருதி குடிநீர் வால்வு தொட்டியை மாற்ற வேண்டியது அவசியமாகிறது. இப்பணியினை மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.3.10லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.10இலட்சத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். (இ2/322/2021)

தீர்மான எண்.6 அனுமதிக்கப்பட்டது.

4)தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு–303ன்கீழ் கரூர் நகராட்சியில் தற்போது வசூலிக்கப்பட்டு வரும் அச்சம் மற்றும் அருவருக்கத்தக்க தொழில்களுக்கு உரிமையாணை கட்டணங்கள் நகர்மன்ற தீர்மானம் எண்.2588 நாள்.11.12.2020ன்படி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு–245, 249, 250, 258, 262, 269 மற்றும் 270ன் கீழ்வரும் தொழில்களுக்கு தற்போது வசூலிக்கப்பட்டு வரும் உரிமையாணை கட்டணங்களை 50% உயர்வு செய்து 01.04.2021 முதல் திருத்தி அமைக்கப்பட்ட உரிமையாணை கட்டணங்கள் குறித்த சீராய்வு அறிவிப்பினை 06.01.2021ம் தேதிய தினத்தந்தி திருச்சி மாவட்ட நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கான விளம்பரக் கட்டணம் ரூ.7,182/–யை வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
மன்றம் அனுமதிக்கலாம். (அ8/7685/2020)

தீர்மான எண்.7 அனுமதிக்கப்பட்டது.

5)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.48ல் அமைந்துள்ள கரூர் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் 26.01.2021 தேதி அன்று குடியரசு தினவிழா சிறப்பாக கொண்டாடுவதற்கு இந்நகராட்சியின் மூலம் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து 08.01.2021 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பின்வரும் பணிகளை மேற்கொள்ள வேண்டி அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

கரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை சீரமைத்தல், குடிநீர், சுகாதார வசதிகள் செய்தல், தற்காலிக கழிவறைகள் அமைத்தல், சட்டமன்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர், மாவட்ட நீதிபதி உள்ளிட்ட உயர் அலுவலர்களுக்கு சிறப்பு நாற்காலிகள் வசதிகள் செய்தல், ஒலி பெருக்கி மற்றும் பயனாளிகள், சுதந்திர போராட்ட தியாகிகள், பொதுமக்கள் ஆகியோருக்கு இருக்கை வசதிகள் செய்தல், மாவட்ட ஆட்சியரின் அலுவலக வளாகத்தை தூய்மையாக வைத்திருக்க துப்புரவு பணியாளர்கள் நியமனம் செய்தல் 25.01.2021 அன்று இரவு விழா முன்னேற்பாடுகளை கவனிக்க ஏதுவாக ஒளி விளக்கு வசதி செய்து கொடுத்தல், மத தலைலர்கள் சிலைகளை அழகுபடுத்தி பராமரித்தல் மற்றும் நகராட்சி புதிய அலுவலக வளாகத்தில் குடியரசு தினவிழா கொண்டாடும் வகையில் துணி பந்தல் அமைத்தல், நாற்காலிகள் அமைத்தல், மின்விளக்கு அலங்காரம் செய்தல், நுழைவுவாயிலில் வாழை மரங்கள் கட்டுதல் போன்ற பணிகளை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ள அனைத்துப் பணிகளையும் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1,50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணிக்குண்டான மதிப்பீட்டுத் தொகை ரூ.1,50,000/—யை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம். (1/665/2021)

தீர்மான எண்.8 அனுமதிக்கப்பட்டது.

6)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.47ல் முத்தலாடம்பட்டியில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2018—2019ன் கீழ் நாடக மேடை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்ட போது இப்பணியை ஆய்வு செய்த மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களிடம் அப்பகுதி மக்கள் நாடக மேடையுடன் இணைத்து இரண்டு அறைகளை கட்டி தருமாறு தெரிவித்ததின் பேரில், நாடகமேடையுடன் இணைத்து இரண்டு அறைகளும் கட்டப்பட்டது. இப்பணியில் கூடுதலாக அறைகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டதால், பூச்சு பணிகள், தரைத்தளம் டைல்ஸ் மற்றும் மின்வசதிகள் பணிகள் மேற்கொள்ள திட்டப்பணிகளில் மேற்கொள்ள இயலாத காரணத்தினால், மேற்குறிப்பிட்டுள்ள கூடுதல் பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.4.45 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு:

1. மன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.4.45 இலட்சத்தை நகராட்சியின் பொதுநிதியில் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். (இ1/1250/2021)

தீர்மான எண்.9 அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர்
கரூர் நகராட்சி